
வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
அன்னைப்பத்து
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.

# வேதாத்தரியப் பார்வையில்
# திருவாசகத்தின் அன்னைப் பத்து

**அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்**

**இதனுள்ளே**

1. நாத தத்துவம்
2. கருணைக் கடலா இறைவன்?
3. இறைவன் மீது திருக்காதல்
4. என் உள்ளம் வாடும் அன்னே!
5. மனதை அடக்கும் உபாயம்
6. மனித சரித்திரம்
7. அவனில் தான் நீ உன்னில் அவன்
8. இறை உறவா?
9. உண்மையான இறை பக்தி
10. இறை பித்தா? இறைக் காதலா?

# 1.நாத தத்துவம்

எல்லையற்ற எங்கும் நீக்கமற நிறைந்துள்ள வெளியின் தன்மாற்ற வெளிப்பாடே இப்பிரபஞ்சம்.

இந்தத் தன்மாற்றம் நிரந்தரமானது. Change alone is permanent என்றாரே கிரேக்க மேதை ஹெராக்லிட்டஸ். அது சத்திய வாக்கு.

வெளி ஒன்றே. அதற்கு நாம் வைத்த பெயர்கள் தா ப ல. வெளிக்கு ஒரு பெயர் பிரம்மம். இன்னொரு பெயர் பிதா. மற்றொரு பெயர் சிவன், அல்லாஹ். இன்னும் எத்தனை, எத்தனையோ பெயர்கள்.

இருந்து விட்டுப் போகட்டுமே. நமக்கென்ன நஷ்டம். அல்லா என்றாலும், சிவன் என்றாலும், பிரம்மம் என்றாலும், பிதா என்றாலும் ஒன்றுதான் என்று உணராததுதான் உண்மையான நஷ்டம்

சரி. தலைப்புக்கு வருவோம். நாத தத்துவம்.

சைவசித்தாந்தத்தின் படி, மும்மலங்களில் ஒன்றான மாயை, பதியால்

இயக்கப்படும் போது, இந்த 36 தத்துவங்களும் படிப்படியாகத் தோன்றுகின்றன.

- சிவ தத்துவம் ஐந்து
- வித்தியா தத்துவம் ஏழு
- ஆன்ம தத்துவம் இருபத்துநான்கு

சிவ தத்துவம் ஐந்தில் நாதம் முதல் தத்துவம்.

- நாதம் – தூய அறிவாலான பரம்பொருளின் முழுமையான நனவிலி நிலை. இதுவே பரசிவ வடிவம் ஆகும்.

நாதத்தில் விந்துவும் நாதவிந் துக்களில்
தீதற் றகம்வந்த சிவன்சத்தி என்னவே
பேதித்து ஞானங் கிரியை பிறத்தலால்
வாதித்த இச்சையில் வந்தெழும் விந்துவே. (திருமந்திரம் பா.382)

நாதனிடம் இருந்து தோன்றியது நாதம். இந்த மொத்தப் படைப்பும் அவனிடம் இருந்து தோன்றிய நாதம் தான்.

படைப்புகளை ஆசை வருத்துகிறது. அதனால் வித்து உருவாகிறது.

உருவாகும் வித்துக்களில், தீமை ஏதும் இல்லாத சிவனும் சக் தியு ம வந் து அமர்கிறார்கள். அவர்கள் அந்த விந்துக்களில் இருந்து தோன்றப் போகும் உயிர்களுக்கு முறையே அறிவு செயல் ஆகியவற்றின் காரணமாக அமைகிறார்கள்.

இராமலிங்க வள்ளலாரும் இந்த நாததத்துவம் பற்றி அருமையாக திருவருட்பாவில் பாடியுள்ளார்.

"விந்துநிலை நாதநிலை இருநிலைக்கும் அரசாய்
 விளங்கியநின் சேவடிகள் மிகவருந்த நடந்து
வந்துநிலை பெறச்சிறியேன் இருக்குமிடத் தடைந்து
 மணிக்கவந் திறப்பித்து மகனேஎன் றழைத்து
இந்துநிலை முடிமுதலாந் திருஉருவங் காட்டி
 என்கையில்ஒன் றளித்தின்பம் எய்துகஎன் றுரைத்தாய்
முந்துநிலைச் சிறியேன்செய் தவமறியேன் பொதுவில்
 முத்தர்மனந் தித்திக்க நிருத்தமிடும் பொருளே"
(பாடல் எண் :3093 திருவருட்பா)

ஞான சபையின்கண் முத்தான்மாக்கள் கண்டு மகிழும்படி, நடனம் புரிகின்ற சிவ பரம்பொருளே,

விந்து தத்துவம், நாத தத்துவம் என்ற தத்துவ மிரண்டிற்கும் தலைமையாய் விளக்க மருளுவனவாகிய நின்னுடைய சிவந்த திருவடிகள் மிக வருந்துமாறு நடந்து போந்து நிற்றற் பொருட்டுச் சிறுமையையுடைய யான் இருக்கு மிடத்தையடைந்து,



அழகிய வாயிற் கதவைத் திறக்கச் செய்து, உட்புகுந்து, மகனே! என என்னை யழைத்தருளிப் பிறை தங்கிய திருவடி முதல் திருவடி யீறாக அமைந்த முழு உருவத்தையும் காட்டி என்னுடைய கையில் ஒன்றைத் தந்து,

இன்பம் எய்துக எனவுரைத்து அருளினாய், முற்படும் மனநிலையை உடைய சிறியனாகிய யான் இதற்கேதுவாகச் செய்துள்ள தவத்தை அறிகிலேன்.

நாதம் மேலதும் விந்து அதன்

கீழதுமாயினும் செய்யுளாகலின் மாறி நின்றது. நாதத்தைச் சிவ தத்துவம் என்றும், விந்துவைச் சத்தி தத்துவம் என்றும் நூலோர் கூறுவர்.

சிவ தத்துவம் ஞானம் என்றும், சத்தி தத்துவம் தோடி தொழில் என்றும் அறிக. இவ்விரண்டிற்கும் மேலாய் நின்று இயக்குவது பரசிவம் ஆதலின், அதனை "அரசாய்" என்று குறிக்கின்றார்.

சிவம் சத்தி என்ற இரு தத்துவங்களையும், திருவடியாகக் கொண்டு "இரு நிலைக்கும் அரசாய் விளங்கிய நின் சேவடிகள்" என உரைக்கின்றார் எனினும் அமையும். வந்ததன் பயன் வள்ளற் பெருமான் சிந்தைக்கண் நிறை பெறுவது கருதத்தினின்மை விளங்க "நிலைபெற" என்கின்றார்.

மணிக்கதவம் - அழகிய கதவு. வருவார் வந்தமை தெரிவிக்கும் மணி கட்டிய கதவு என்று உரைப்பதுமுண்டு. பிறை தங்கிய சடைமுடியை "இந்துநிலை முடி" எனக் குறிக்கின்றார்.

பிறைச்சந்திரன். இது கொண்டு நிலைத்த இன்பம் பெறுக என்பாராய், "என் கையில் ஒன்றளித்து இன்பம் எய்துக என்று உரைத்தாய்" என மொழிகின்றார்.

உரை கேட்டவிடத்து உளதாகிய உள்ளத் துடிப்புப் புலப்பட, "முந்துநிலைச் சிறியேன்" என்றும், இத்துணை நலம் உளதாதற்குக் காரணம் முன்னைத் தவமெனத் தெளிந்தமை தோன்ற, "செய்தவம் அறியேன்" என்றும் இயம்புகின்றார்

"நாதப் பறையினர் நான்முகன்" என்று திருவாசகத்தில் மாணிக்கவாசகர் பாடுகிறார்.

"வேத மொழியர்வெண் நீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதர் இந்நாதனார் அன்னே என்னும்." (திருவா.பா.338)

- தோழி!
- இந்தத் தலைவர் வேதம் சொன்னவர்.
- வெண்ணீறு அணிந்தவர்.
- சிவந்த மேனி உடையவர்.
- நாத தத்துவமாகிய பறையினை உடையவர் என்றும்.
- தோழி! நாத தத்துவமாகிய பறையினை உடைய இவர், பிமனுக்கும் திருமாலுக்கும் தலைவர் என்றும். தலைவி கூறுகிறாள்.

### வேதாத்திரியப் பார்வையில் நாத தத்துவம்

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் என்னும் வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வம் என்பது வேதாத்திரியக் கடவுள் கோட்பாடாகும். பெருவெளியின் பெரும் செயல்களை தனது அகத்தவத்தால் உணர்ந்து உணர்த்தியவர் வேதாத்திரி மகரிஷி.

## பேரறிவு – வேதாத்திரியம்

இருப்புநிலை, சூன்யம், ஒன்றுமில்லாதது என்று பலரும் எண்ணுகின்றனர். இது தவறானது.

இருப்புநிலை எல்லாவற்றையும் தன்னுள் பெற்றுள்ளது. அனைத்து பொருளும் இங்கிருந்து தான் ஆரம்பிக்கின்றது.

இதனுள் இயங்குகின்றது. இருப்புநிலையை கடல் என்று நாம் எண்ணினால் பிரபஞ்சத்தில் உள்ள மிகச்சிறிய பொருள்களிலிருந்து மிகப் பெரிய பொருள் வரை அதன் இயக்கங்கள், சக்திகள் அனைத்தும் கடலில் தோன்றுகின்ற அலைகளாகும்.

அலைகள் கடலில் தோன்றி, கடலின்மேல் அசைந்து, கடலில் முடிவடைகின்றது. அதே போன்று மிகச்சிறிய பொருளிலிருந்து மிகப் பெரிய சூரியன் வரை உள்ள அனைத்து பொருள்களும், உயிர்வாழும்

ஜீவன்களும் இருப்பு நிலையிலிருந்து (Static State) தோன்றி, அதனுள் இயங்கி, அதனுள்ளே முடிவடைகின்றது.




நீக்கமற நிறைந்துள்ள பூரணத்தில் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் இருப்பு நிலையில் மிதக்கின்றன. அசைகின்றன.

தண்ணீரில் அதன் நுரை மிக நின்றாகத் தெரியும். நீரில் நுரை மிதப்பதைப் போன்று அனைத்துப் பொருள்களும் பூரணத்தில் மிதந்து கொண்டு உள்ளன.

எண்ணிப் பாருங்கள். ஒரு பொருள், அதன்மேல் மற்றொரு பொருள் இதில் எது சக்திவாய்ந்தது. அசைகின்ற ஒவ்வொரு பொருளையும் தன்னிடம் பிடித்துக் கொண்டிருப்பது இருப்புநிலை.

பிரபஞ்சம் முழுதும் பூரணத்தில் அடங்கியுள்ளது. பூரணத்தில் மிதந்து கொண்டும் இயங்கிக் கொண்டும் இருக்கிறது.

சுற்றிலும் சூழ்ந்துள்ள இருப்புநிலையின் அழுத்தத்தால் பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு துகளும் தற்சுழற்சி வேகத்துடன் இயங்கிக் கொண்டுள்ளது.

பொருள்களின் தன்மைக்கேற்ப பிரபஞ்சம் முழுதும் வெவ்வேறு வேகத்துடன் அவைகள் இயங்கிக் கொண்டுள்ளது. இருப்பு நிலையே எல்லாம் வல்லது, அதுவே ஆதிநிலை.

### எது பிரபஞ்சம்? வேதாத்திரியம்

வேகத்தின் எல்லையே பருமனாக
 விளைந்துள்ளது அதன் தொடரே காலமாகும்
வேகமது பிளவுபட்டு இயங்கும்போது
 வேறு படுத்தும் வெளியின் அளவே தூரம்
வேகம் பருமன் காலம் தூரம் என்ற
 விதம் நான்காய்ப் பரம் பரம அணுவாயிற்று
வேகமாய் அணு இயங்க வெளி அழுத்த
 விளையும் தொடர் நிகழ்ச்சிகளே பிரபஞ்சம் ஆம்.
(வேதாத்திரி மகரிஷி)

“கும்பிடுதல் பொருட்கள் பல கொடுத்தல் இவை இரண்டிற்கே
குரு தெய்வ நாட்டமுடன் கூடி அலையும் உலகீர்
வம்புகளை வளர்க்கின்றீர் வாழ்வைப் பாழாக்குகின்றீர்
வாரீர் அறிவை அறிந்தவ் வழி ஒழுகி உயர்வடைவீர்.”
(வேதாத்திரி மகரிஷி)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம் ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

## 2. கருணைக் கடலா இறைவன்?

கருணை என்றால் என்ன? ஜென்

ஒரு இளைஞன், ஒரு ஜென் குருவிடம் வந்தான். அவன் எல்லாவற்றையும் அனுபவித்து சலித்து விட்டதால் ஜென்குருவிடம் வந்து, ஐயா எனக்கு உலகம் சலித்து போய்விட்டது. உங்களிடம் சீடனாய் சேர விரும்புகிறேன் என கேட்டான்.

குரு”எப்போதாவது நீ உன்னை முழுமையாக மறந்து போகும் அளவிற்கு ஆர்வத்துடன் ஆழமாக எதிலாவது ஈடுபட்டதுண்டா? என கேட்டார்.

இளைஞன் சிந்தித்து விட்டு ஆமாம், சதுரங்கத்தில் மட்டுமே அது நடந்துள்ளது. சதுரங்க விளையாட்டில் எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. எனக்கு அது மிகவும் பிடிக்கும். எனக் கூறினான்.

குரு,,,நீ காத்திரு எனக் கூறிவிட்டு அவர் தன் உதவியாளனை அழைத்து பணிரெண்டு வருடங்களாக மடாலயத்தில் தியானம் செய்து கொண்டிருக்கும் ஒரு துறவியை சதுரங்க அட்டையோடு அழைத்து வரும்படி கூறினார்.

சதுரங்க அட்டை கொண்டு வரப் பட்டது. துறவி வந்தார். அவருக்கு சிறிது சதுரங்கம் தெரியும், ஆனால் சதுரங்கம் அனைத்தையும் மறந்து விட்டார்.

குரு, அவரை பார்த்து துறவியே கேள், இது ஒரு ஆபத்தான விளையாட்டாக இருக்கப் போகிறது. நீ இந்த இளைஞனால் தோற்கடிக்கப் பட்டால், இதோ இந்த வாளால் நான் உனது தலையை வெட்டி விடுவேன் என்றவர்

அவனிடம் திரும்பி, இதோ பார், இது வாழ்வா சாவா என்பதற்க்கான போட்டி நீ தோற்றுவிட்டால் நான் உன்னுடைய தலையை வெட்டி விடுவேன் என்பதை நினைவில் கொள் என்றார்.

போட்டி தொடங்கியது.

இளைஞனுக்கு முழு உடலும் நடுங்கியது. அது வாழ்வா, சாவா என்பதற்குரிய கேள்வியல்லவா?

துறவி விளையாடத் தொடங்கினார். அவர் சாந்தமாகவும் அமைதியாகவும் காட்சியளித்தார். இளைஞன், அருமையாக விளையாடத் தொடங்கினான்.

அவன் அதுபோல இதுவரை விளையாடியதேயில்லை. ஆரம்பத்தில் துறவி வெற்றி பெற்றுக் கொண்டிருந்தார்.

ஆனால் இளைஞன் அதில் முழ்கிய ஒரு சில நிமிடங்களில் அருமையாக காய்களை நகர்த்த தொடங்கினான். துறவி தோற்றுப் போக ஆரம்பித்தார். அவனுடைய வெற்றி நிச்சயமாகி விட்டது.

அவன் அந்த துறவியை பார்த்தான். அவர் மிகவும் வெகுளித்தனமாய் இருந்தார். பனிரெண்டு வருட தியானம் அவரை மலர் போல ஆக்கியிருந்தது. போட்டியில் தோற்று அவருடைய தலை வெட்டப்படுமே என்பதை நினைத்ததுமே அவர்பால் அவனுக்கு அன்பு ஏற்பட்டது.



இந்த கருணையை உணர்ந்த அந்த கணமே அவனுக்கு, தெரியாத கதவுகள் திறந்தன. பிறகு அவன் தெரிந்தே காய்களை தவறாக நகர்த்தினான். ஏனெனில் நான் இறந்தால் எதுவும் இழப்படையப் போவதில்லை.

ஆனால் இந்த துறவி கொலை செய்யப் பட்டால் அழகான ஒன்று அழிந்துவிடும். ஆனால் நான் பயனற்றவன். துறவியை வெற்றி பெறச் செய்வதற்க்காக தெரிந்தே அவன் தவறாக காய்களை நகர்த்தத் தொடங்கினான்.

அந்த நொடியில் குரு மேசையை தலைகீழாக கவிழ்த்துவிட்டு சிரிக்கத் தொடங்கினார்.

அவர், இங்கு யாரும் தோற்கவில்லை. நீங்கள் இருவரும் வென்று விட்டீர்கள். எனக் கூறினார்.

குரு,,,மகனே நீ வெற்றி பெற்றுவிட்டாய். உன்னுடைய வெற்றி இந்த துறவியின் வெற்றியை விடவும் பெரியது. நான் இப்போது உன்னை சீடனாக்கி கொள்கிறேன். நீ இங்கு இருக்கலாம். விரைவில் நீ ஞானமடைவாய் எனக் கூறினார்.

இதுதான் கருணை. உன்னை விட மற்றவர் முக்கியமாக படும்போது, நீ மற்றவருக்காக பிரதிபலனின்றி உன்னை தியாகம் செய்யும் பொழுது நீ கருணை உடையவனாகிறாய்.

அன்பு எப்போதும் கருணை மயமானது.
அவை உனது இருப்பின் ஒரு இயல்பாகட்டும்..

“இறைவன் அருட்கடலாய் விளங்குகிறார்” என்று திருவாசகம் பாடுகிறது.

“கண் அஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உள்நின்று உருக்குவர் அன்னே என்னும்
உள்நின்று உருக்கி உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும்.” (திருவா.பா.339)

- தோழி!
- கண்ணில் மைபூசி இருப்பவர்.
- அருட்கடலாக விளங்குபவர்.
- உள்ளத்தின் உள்ளே நின்று உருகுமாறு செய்பவர் என்றம்.
- தோழி! உள்ளத்தின் உள்ளே நின்று உருகுமாறு செய்து. வற்றாத இன்பக் கண்ணீரைத் தருபவர் என்றும். தலைவி கூறுகிறாள்.

## அன்பும் கருணையும் – வேதாத்திரியம்

இறைவா! இன்பத்தினுடைய ஊற்றுக் கண்களாகத் திகழ்கிறாய்! அன்பும் கருணையும் எல்லா உயிர்களிடத்திலேயும் காண அறிவால்

இயக்கம் பெற்று இன்பத்தின் ஊற்றுக் கண்ணாக எல்லையற்ற விரிந்த நிலையிலே தோன்றுகிறாய்,

அழகான உலகத்தைப் படைத்தாய். எல்லா உயிர்களுக்கும் வாழ பல நல்ல வாய்ப்பினை நிறைவாக வைத்திருக்கின்றாய்.

மறைவு இல்லாமல் உள்ளத்தின் உள்ளேயும், உள்ளத்தின் வெளியேயும் தொடர்ந்து பெருக்கெடுக்கக் காரணமாக அமைகிறாய்.

பேரின்பத்திற்கு அழிவு இல்லை. அது அறிவின் அலையாகத் தோற்றமளிக்கிறது. உண்மையான தன்மையினை மறந்து விட்டு, உணர்ச்சி தன்னை மேலோங்கச் செய்து கொள்வதால் நம் நினைவுகள் ‘தான்’ ‘தனது’ என்ற குறுகிய எல்லைக்குள் இறுக்கமாக நின்று கொள்கிறது.

ஆதலால் மண்ணாசை, பொன்னாசை என மேன்மேலும் பெருகி நிற்கின்றன. இதனை மாற்றியமைக்க தீய செயல்களில் புகாமல் என் கருத்துக்குள்ளும் இன்ப ஊற்றாகப் பெருக்கெடுக்க வேண்டும்.

என்னை உடலாக நினைத்துப் பார்த்தேன். அதனால் உணர்ச்சிகள்தான் என்னை வருத்தமடையச் செய்தன.

என் உடலுக்குள்ளே உயிரை உணர்ந்து அறிவு அமைய நிறைவு பெற்றேன். உடலுக்குள்ளும் உயிருக்குள்ளும் செல்லும் வழியாக உன்னை அறியத் தலைபட்டபோது உடலும் உயிரும் அறிவும் நீயாகவே இருப்பதை உணர்ந்து நான் என்னும் பெருமை உணர்ந்து அடக்கமாகக் கற்றுக் கொண்டேன்.

காலம் காலமாகப் பதிவாக வந்த வினையின் அளவு அதிகரித்துக் கொண்டு வருவதை விடுத்து இந்தப் பிறவியில் தூய்மை பெறுவதற்காகவே உடல் எடுத்தாக நினைத்தேன்.

நிலத்தில் பிறந்தபோது மறுபடியும் என்னை நான் மறந்தேன். அதோடு இறைவா உன்னையும் மறந்தேன்.

ஆனால் நீ மட்டும் என் உள்ளத்தில் நிறைந்து என்னை மீட்டுக் கொண்டு விட்டாய். பேரின்ப ஊற்றாகத் திகழ்கிற இறைவா! நன்றிப் பெருக்கோடு இன்ப ஊற்றாய் உன்னை உணர்கிறேன். (வேதாத்திரி மகரிஷி)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம் ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 3. இறைவன் மீது திருக்காதல்

பக்தியில் திளைத்து, உலக வாழ்வின் இன்பங்களில் பற்றை விடுத்து, பக்திப் பரவசம் மேலோங்க ஆனந்த நிலையை எய்திய ஞானிகளில். பலர் தங்களது இறையனுபவத்தைப் பாடல்கள் வாயிலாக வெளிப்படுத்தினர்.

அப்பாடல்கள் நமக்கு இன்றும், என்றும் வாழ்வியல் நற்சிந்தனைகளை வழங்குகின்றன.

18-ம் நூற்றாண்டில் நம்மிடையே வாழ்ந்து மறைந்த இரு வேறு ஞானியர் தாங்கள் பின்பற்றிய ஞானநெறி வெவ்வேறானதாக இருந்தாலும், இருவரும் ஒரே மாதிரியான இறையனுபவத்தைப் பாடல்களில் வெளிப்படுத்தியது வியப்பூட்டுகிறது.

## தாயுமானவரும் குணங்குடி மஸ்தான் சாகிபும்

18-ம் நூற்றாண்டில் வாழ்ந்து, இறையனுபவத்தில் ஈடுபட்டு, “பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம் அற நிறைகின்ற பரிபூரணானந்தமே” என்று ஞானநிலையை அடைந்தவர் தாயுமானவர்.

திருச்சி மலைக்கோட்டையில் எழுந்தருளியுள்ள தாயுமானவரை வணங்கி மகப்பேறு வாய்த்ததால், அவருடைய பெற்றோர் அவருக்குத் தாயுமானவர் என்றே பெயர் சூட்டினர்.

கல்வி கேள்விகளில் சிறந்து, சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்று, சைவ ஆகமங்களையும் கசடறக் கற்றார் தாயுமானவர். திருமூலர் மரபில் வந்த குரு ஒருவரால் ஆட்கொள்ளப்பட்டு, “சும்மா இரு” என்ற உபதேசத்தைப் பெற்றார் தாயுமானவர்.

இந்த உபதேச மொழிதான், அவருடைய பாடல்களுக்கு அடிப்படையாக அமைந்தது. சூழ்நிலை காரணமாக நாயக்கர் ஆட்சியில், ராஜப் பிரதிநிதியாகப் பொறுப்பு வகித்தாலும், அவர் மனது பக்தி மார்க்கத்தில் மூழ்கி இருந்தது.





எனவே, சந்நியாசம் பூண்டு, தல யாத்திரை சென்றார். பரிபூரணானந்தம், மௌன குரு வணக்கம், சுகவாரி, தேஜோமயானந்தம், பராபரக்கண்ணி, ஆனந்தக் களிப்பு என்று பல தலைப்புகளில் பாடல்களை இயற்றினார்.

18-ம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்த இஸ்லாமிய மெய்ஞ்ஞானி குணங்குடி மஸ்தான் சாகிபு. அவர் இராமநாதபுரம் மாவட்டம் தொண்டிக்கு அருகே உள்ள சிற்றூரான குணங்குடியில் பிறந்தவர்.

“மஸ்த்” என்ற பாரசீகச் சொல்லுக்கு ‘போதை, வெறி’ என்று பொருள். இறைவன் மீது தீராக்காதல் கொண்டு, ஞானநிலையுடன் திகழ்ந்ததால் அவரை மஸ்தான் என்று அழைத்தனர்.

இச்சொல்லோடு ஊர்ப்பெயரை இணைத்து “குணங்குடி மஸ்தான் சாகிபு” என்று அறியப்பட்டார்.

அவர் சூ:ஃபித்துவத்தைப் பின்பற்றியவர். சூ:ஃபி என்ற அரபுச் சொல்லுக்குப் பல அர்த்தங்கள் கூறப்பட்டாலும், ஆத்ம ஞானம் என்ற சொல் வெகுவாகப் பொருந்தும்.

அவர்தம் படைப்புகள் பேரானந்தத்தையும், மனித வாழ்வின் தத்துவ நிலையையும் கூறின.

இறைவனை அறிந்து, அவனுடன் இரண்டறக் கலக்கும் நினைவில் தம்முடைய சூ:ஃபி மார்க்கத்தின் இறுதியை அடைந்து பாடிய பாடல்கள் எளிமையாகவும், ஞானக் கருத்துக்களைக் கூறுவனவாகவும் இருக்கின்றன.

குருவணக்கம், ஆனந்தப்பத்து, சதக நூல்கள், ஆனந்தக் களிப்பு, கண்ணிகள் (நிராமயக் கண்ணி, பராபரக் கண்ணி, ரகுமான் கண்ணி, எக்காலக் கண்ணி போன்றவை) கீர்த்தனைகள் ஆகியவை அவர் படைப்புகளில் குறிப்பிடத்தக்கவை.

## ஆனந்தக் களிப்பு அடைந்த அருளாளர்கள்

பேரின்பத்தில் திளைத்து, இறைவனை அறிந்து அவனுடன் இரண்டறக் கலக்கும் ஞான அனுபவத்தைப் பெருமகிழ்ச்சியுடன் சொல்வதே ‘ஆனந்தக் களிப்பு’.

தாயுமானவர், குணங்குடியார் ஆகிய இருவருமே ‘ஆனந்தக் களிப்பு என்ற தலைப்பில் தங்கள் இறையனுபவத்தை வெளிப்படுத்தி, பாடல்களை இயற்றியுள்ளனர்.

தாயுமானவர் தமது ‘சங்கர சங்கர சம்பு சிவ, சங்கர சங்கர சங்கர சம்பு என்று துவங்கும் ஆனந்தக் களிப்பில்,

ஆதி அநாதியும் ஆகி எனக்கு
ஆனந்தமாய் அறிவாய் நின்று இலங்கும்
ஜோதி மவுனியாய்த் தோன்றி அவன்

சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி தோழி! – சங்கர

என்று தான் அறிந்த ஜோதிமய ஆனந்த நிலையையும், அதற்குக் காரணமான மௌன குருவின் பெருமையையும் ஒருசேரக் கூறுகிறார்.

என்னையும் தன்னையும் வேறா உள்ளத்து
எண்ணாத வண்ணம் இரண்டு அற நிற்கச்
சொன்னது மோஒரு சொல்லே அந்தச்
சொல்லால் விளைந்த சுகத்தை என் சொல்வேன் சங்கர

என்று இறைவனுடன் இரண்டறக் கலந்த பெருநிலையை விவரிக்கிறார் தாயுமானவர்.

குணங்குடியார் தமது சூ:ஃபி மார்க்கத்தின் இறுதியை அடைந்து பாடிய பாடல்கள் ஆனந்தக் களிப்பு என்ற தலைப்பில் அமைகின்றன.

"இன்றைக்கிருப்பதும் பொய்யே இனி
என்றைக் கிருப்பது மெய்யென்ப தையே
என்று மிருப்பது மெய்யே என
எண்ணி எண்ணி அருள் உண்மையைப் போற்றி!!

என்று மெய்ஞ்ஞானத்தை உணர்ந்த நிலையினைக் கூறி,

மூலக் கனலினை மூட்டும் ஒளி
மூக்கு முனையில் திருநடனங் காட்டும்
பாலைக் கறந்துனக் கூட்டும் என்று
பட்சம் வைத்தென்னைப் படைத் தருளித்தான்

என்று குருவருளால் கிட்டும் யோகப் பேரானந்த நிலையை விவரிக்கிறார் குணங்குடியார்.

அது மட்டுமல்லாமல்,

எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே! என்று தாயுமானவர் பாடுவதை,

குணங்குடியார்

எந்த உயிரும் எமது உயிர் என்று எண்ணிஎண்ணிச்
சிந்தை தெளிய அருள் செய்வாய் நிராமயமே

என்று பாடுகிறார். வெவ்வேறு நெறிகளைப் பின்பற்றினாலும் அனைவரும் சென்றடைய வேண்டியது இறைச் சிந்தனையின் பேரானந்த நிலைதான் என்பதை நமக்கு உணர்த்துகின்றன இப்பெரியோரின் பாடல்கள்.

## பேரின்பத்தின் இறுதி இலக்கு

மெய்ஞ்ஞானத்தின் அடிப்படை 'தன்னையறிதல்'. தன்னையறியும் முயற்சியில் ஈடுபடுபவர் தான் பேரின்பத்தின் இறுதி இலக்கான இறைவனை அடைய முடியும்.

அந்த நிகழ்முறையில், இவ்வுலக ஆசைகளை விட்டொழித்து, நிலையாமையை உணர்ந்து, இறை வழிபாட்டில் தன்னைக் கரைத்துக் கொள்வதே ஞானநெறியாகும்.

18-ம் நூற்றாண்டில் வாழ்ந்த தாயுமானவர் மற்றும் குணங்குடி மஸ்தான் சாகிபு இருவருமே ஞானநெறியில் ஈடுபட்டு, ஆனந்தக் களிப்பை அடைந்தனர்.

“இறைவன் பேரின்பமானவர்” என்று திருவாசகம் பாடுகிறது.

“நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத்து இருப்பரால் அன்னே என்னும்
சித்தத்து இருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர் ஆனந்தரால் அன்னே என்னும்.” (திருவா.பா.340)

- தோழி!
- எப்பொழுதும் மணவாளராய் விளங்குபவர்.
- மிகுந்த அழகு உடையவர்.
- நெஞ்சினுள் இருப்பவர் என்றும்.
- தோழி! நெஞ்சினுள் இருப்பவர் தென்னாட்டுக்கு உரியவர்,
- திருப்பெருந்துறைத் தலைவன்,
- பேரின்மயமானவர் என்றும். தலைவி கூறுகிறாள்.

## இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா - வேதாத்திரியம்

இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா - எங்கும்
இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா
அன்பும் கருணையுமாய் அனைத்துக்குள்ளும் அறிவாய்,
இன்ப ஊற்றாய் அறிவாய் இயங்கும் பராபரமே. (இன்ப ஊற்றாய்)

எழிலுலகம் படைத்து எல்லா உயிர்களுக்கும்
வழிவழியாக வாழ வாய்ப்பை நிரப்பி வைத்து,
ஒழிவிலாத் தொடராக உள்ளும் புறமும் ஊற்றாய்
அழிவிலாப் பேரின்ப அறிவலையாய்த் திகழும், (இன்ப ஊற்றாய்)

உண்மை நிலை மறந்து உணர்வு தன்முனைப்பாகி,
எண்ணம் ‘தான்’ ‘தனது’ என்று இறுகிக் குறுகி நின்று,
மண்ணைப் பொன்னை மென்மேலும் மாறிமாறி நினைந்து,
கண்ணும் கருத்தும் தீய காமம் புகாமல் என்னுள் (இன்ப ஊற்றாய்)

உடலாய் எனை நினைந்தேன்! உணர்ச்சிகள் வருந்தின!
உடலுள் உயிராய் என்னை உணர்ந்து அறிவில் நிறைந்தேன்!!
உடலுயிர் ஊடறிவாய் உன்னை உணர்ந்தபோது,
உடலுயிர் அறிவு நீயாய் உணர்ந்துன்னுள்நான் அடங்க… (இன்ப ஊற்றாய்)

வினைப்பதிவாம் சுமையை விடுத்துத் தூய்மை பெறவே,
நினைவாய் உடலெடுத்தேன் நிலம் மீது விழுந்த பின்னே,

எனை மறந்தேன் என்றன் வினை மறந்தேன் இறைவா!
எனை மறந்தேன் ஆனால் நீ உள் நிறைந்து எனை மீட்டு.
(வேதாத்திரி மகரிஷி ஞாக.பா.1646) வாழ்க வளமுடன்

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம் ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 4. என் உள்ளம் வாடும் அன்னே!

## தாத்தாவும் பேரனும்

தத்துவங்களைப் புரிந்து கொண்டால் நம் வாழ்க்கையில் நடைபெறக் கூடிய எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அர்த்தம் புரிந்து விடும்.

இறைநிலையைத் தாத்தா என்றால், அதிலிருந்து முதலில் தோன்றிய விண் மகன். முதல் விண்ணிலிருந்து இரண்டாவதாகத் தோன்றிய நிழல்-விண்ணோ இறைவெளிக்குப் பேரன்.

பேரன் எங்கே போனாலும் தாத்தாவுடன் சேர்ந்து கொண்டான். நிழல் விண் இறைவெளியோடு கலந்துவிட்டது தான் காந்தம்.

அப்படியானால் தாத்தாவும், பேரனும் அதாவது இறைவெளியும், நிழல் விண்ணும் ஆடும் கூத்துத் தான் பிரபஞ்சம்.

இறைவெளியில் நிழல் விண்கரைந்த நிலை காந்தம். காந்தம் தான் அழுத்தமாக, ஒலியாக, ஒளியாக, சுவையாக, மணமாக, மனமாகப் பிரபஞ்சம் முழுவதிலும் எல்லாப் பொருளிலும் இருக்கிறது.

இறைவெளி என்ற தாத்தாவும், நிழல் விண் என்ற பேரனும் ஆடுகிற கூத்துத் தானே இவையனைத்தும்!

இறைவெளி புலன்களுக்கு எட்டாது இருந்ததனால் அதை விவரித்துச் சொல்ல முடியவில்லை. ஆனால், எப்படித் தத்துவஞானிகள் கண்டுபிடித்தார்கள்?

மனம் சுழல் விரைவு அதிகமாயிருக்கிறபோது அது அலை.
அலைக்கு அடித்தளமாக இருப்பது இறைநிலை.
இறைநிலையிலிருந்து அலை விலகி நிற்கிற மாதிரி இருக்கும்.

ஆனால், மன அலைச் சுழல் விரைவு குறையக் குறைய, இறையுணர்வும் இறையாற்றலும் அந்த மனத்திற்கு வலுவைத் தருகின்றன.

அப்படியே அந்த இறைநிலையோடு நெருங்கியிருக்கிறபோது, மனம் இறைநிலையைத் தெரிந்து கொள்கிறது.

இறைநிலையிலிருந்து தானே எல்லாமே வந்தன? எல்லா இயக்கங்களும், பதிவுகளும் வான்காந்தத்தில் தான் இருக்கின்றன. அதோடு மனம் இணைகிறபோது அங்கிருக்கக்கூடிய உண்மைகள் எல்லாம் தெரிகின்றன.

நேற்று நடந்த செயலை நினைத்தால் நினைவிற்கு வருகிறது போலத் தனக்குள்ளாகவே பிரபஞ்ச ரகசியங்கள் தெரியும்.
(யோகிராஜ் வேதாத்திரி மகரி ஷி(

தாத்தா பேரன் தத்துவத்தால்தான் " வேடம் இருந்தவா கண்டுகண்டு என் உள்ளம் வாடும் இதுஎன்னே அன்னே என்னும்" என்று பாடுகிறது திருவாசகம்.

"ஆடு அரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றுஓர்
வேடம் இருந்தவாறு அன்னே என்னும்
வேடம் இருந்தவா கண்டுகண்டு என் உள்ளம்
வாடும் இதுஎன்னே அன்னே என்னும்." (திருவா.பா.341)

- தோழி!
- ஆடுகின்ற பாம்பு அணிகலன்,
- புலித்தோல் உடை,

- சாம்பல் பொடி பூச்சு, ஏன் இந்த வேடம்? என்றும்.
- தோழி! வேடம் இப்படி இருந்தும், அவரைப் பார்த்துப் பார்த்து என் உள்ளம் ஏங்குகிறதே இது ஏன்? என்றும். தலைவி கேட்கிறாள்.

## இறையுணர்வே இறதிப்பயன். – வேதாத்திரியம்

"ஆறறிவும் அதற்கொத்த உடல் உறுப்பு புலன்கள்
அத்தனையும் சிறப்பாக அமைந்துள்ள மனிதன்,
ஆறறிவின் உச்சத்தில் அருள் ஒளியாய் வாழ,
ஆன்மீக வாழ்க்கையதே பொருத்தமான தாகும்!
ஆறறிவு என்னவெனில், ஆதிபரம் பொருளை
அறிந்ததுவே அறிவாயும் ஆளுகின்ற உண்மை
ஆறறிவின் நுண்திறனால் அறிந்து, அந்தப் பேற்றால்
அனைத்துயிர்க் ளோடன்பில் ஆழந்துவாழும் வாழ்வாம்."
(ஞாக.பா.1231)

முன் அனுபவம், தற்கால சூழ்நிலை, பிற்கால விளைவு ஆகிய மூன்றையும் கணிக்கக் கூடிய ஆறாவது அறிவைப் பெற்றவன் மனிதன்.

ஆறாவது அறிவு செயல்படுத்துக்கூடிய வகையில் உடல் உறுப்புகள், புலன்கள் ஆகியவை சிறப்பாக அமையப் பெற்றவன் மனிதன்.

ஐயறிவு விலங்குகள் வரை சிந்தனையாற்றல் இல்லை. ஆறாவது அறிவு எல்லாவற்றையும் அறியக் கூடியது ஆகும்.

ஆறாவது அறிவின் உயர்வு நிலையில் அன்பு வழியான, தானும் வாழ்ந்து, மற்றவர்களையும் வாழ வைக்கக்கூடிய அருள் ஒளியாகிய ஆன்மீக வாழ்வில் மனிதன் வாழ்வது தான் பொருத்தமாக இருக்கும்

ஆறறறிவு என்பது. எல்லா இயக்கங்களுக்கும் மூலமான இறைநிலையை உணர்ந்து, அதுவே அறிவாக எல்லாவற்றையும் இயக்குகிறது என்பதையும் ஆறாவது அறிவின் நுட்பத்தினால்

அறிந்து கொண்டு. எல்லா உயிர்களோடும் அன்பில் ஆழ்ந்து இணக்க த்தோடு வாழ்வது ஆகும்.

மனித வாழ்வின் ஆறாவது அறிவின் இறுதிப் பயன், எல்லாவற்றிலும் இறைநிலையை உணர்வதாகும்.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம் ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

## 5. மனதை அடக்கும் உபாயம்

குரங்குகள் இயற்கையாகவே சஞ்சல மனம் படைத்தவை. அத்தகைய குரங்கு ஒன்று இருந்தது. அதற்கு நிறைய கள்ளைக் குடிக்கக் கொடுத்தான் ஒருவன்.

அதனால் அதன் பரபரப்பு அதிகமாகியது. அது போதாதென்று தேள் ஒன்று அதனைக் கொட்டியது. தேள் கொட்டினால் மனிதனே நாள் முழுதும் குதிப்பான். குரங்கின் நிலையைச் சொல்லவா வேண்டும்?

அதன் போதாத காலத்தைப் பூரணமாக்க ஒரு பேயும் அதனைப் பிடித்துக் கொண்டது. இப்போது அந்தக் குரங்கின் அடக்க முடியாத சஞ்சலத்தையும், படபடப்பையும் விளக்க வார்த்தைகள் எங்கே உள்ளன?

இந்த உதாரணத்தை கூறி, மனித மனத்தின் பரிதாப நிலைப்பாட்டை விளக்குகிறார் சுவாமி விவேகானந்தர்:



மனித மனம் அந்தக் குரங்கின் நிலைக்கு நிகரானது. இயற்கையாகவே அது சஞ்சல இயல்பு படைத்தது.

ஆசை என்னும் கள் குடித்ததனால் அதன் சஞ்சலமும் வெறியும் அதிகரிக்கின்றன. ஆசை குடிகொண்ட பிறகோ பிறர் வெற்றியைக் கொண்டு பொறாமை கொள்கிற குணமாகிய தேள் கொட்டியது.

முடிவாக கர்வம் என்ற பேயும் மனத்தினுள் புகுந்து எல்லா பெருமையும் தனக்கே என்று நினைக்கச் செய்கிறது. இத்தகைய மனத்தைக் கட்டுப்படுத்துவது எவ்வளவு கடினம்!...

ஆனால் இது முடியக்கூடியதா? ஆம், கண்டிப்பாக முடியும். எனவே முதல் பாடமாக வருவது இது: சிறிது நேரம் அமர்ந்து மனத்தை அதன் போக்கிலேயே அலையவிடுங்கள். அது எப்போதும் குமுறிக் கிளம்பிய வண்ணமே உள்ளது.

குரங்கு குதித்துத் தாவுவதைப் போன்றது அது. எவ்வளவு வேண்டுமானாலும் அது குதிக்கட்டும். நீங்கள் பொறுமையாக அதைக் கவனிக்க மட்டும் செய்யுங்கள்.

அறிவே வலிமை என்பது பழமொழி. அது உண்மை. மனம் என்ன செய்கிறது என்பதை அறியாமல் அதைக் கட்டுப்படுத்த முடியாது.

கடிவாளத்தை விட்டுப் பிடியுங்கள். தீய எண்ணங்கள் பல அதில் எழலாம். அத்தகைய எண்ணங்கள் உங்கள் மனத்தில் இருந்ததைப் பற்றி நீங்களே திகைப்படைவீர்கள்.

நாள் செல்லச் செல்ல மனத்தின் வெறித்தனமான போக்கு குறைவதையும், அது மெள்ள மெள்ள அமைதி பெறுவதையும் காண்பீர்கள்.

ஆரம்பத்தில் சில மாதங்கள் மனத்தில் பல எண்ணங்கள் எழுவதைக் காண்பீர்கள். பிறகு அவை குறையத் தொடங்கும்.

சில மாதங்களுக்குப் பிறகு தொடர்ந்து குறைந்து கொண்டே போகும். கடைசியாக மனது பூரணக் கட்டுப்பாட்டில் வந்துவிடும்.

ஆனால் தினமும் பொறுமையுடன் பயிற்சி செய்யவேண்டும்...இது ஒரு பெரிய வேலைதான், ஒருநாளில் செய்துமுடிக்கின்ற வேலையல்ல. பொறுமையாகத் தொடர்ந்து வருடக்கணக்காகப் பயிற்சி செய்தால் நாம் வெற்றி பெறுவோம்.(சுவாமி விவேகானந்தர்)

"நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன் னாடரால் அன்னே என்னும்
பாண்டிநன் னாடர் பரந்தெழு சிந்தையை
ஆண்டு அன்பு செய்வரால் அன்னே என்னும்." (திருவா.பா.342)

- தோழி!
- நீண்ட கைகளை உடையவர்.
- திரண்ட தலைமுடியினை உடையவர்.
- பாண்டி நாட்டுக்கு உரியவர் என்றும்.
- தோழி! பாண்டி நாட்டுக்கு உரியவர் அலைந்து திரியும் மனத்தை அடக்கி ஆண்டு அன்பு செய்வார் என்றும். தலைவி கூறுகிறாள்.

## துன்பம் இல்லாத நிலை - வேதாத்திரியம்

.

"ஆறாவது அறிவு முழுமை பெறுகிறது என்றால், விரிந்து விரிந்து பரம் பொருளோடு இணைந்து இதற்கும் மேலே விரிய முடியாத அளவு அந்த முழுமுதற் பொருளோடு இணைந்துவிட்ட பிறகு இனி எங்கே விரியும்? அதற்கு மேல் விரிவு இல்லை.

அந்த வகையிலே இந்த மனம் அசையாப் பொருளை அறிந்து அதோடு நிலைத்துவிட்டால் அங்குதான் மனம் என்பது நிலைக்கு முடியும்.




மற்ற பொருட்கள் எல்லாம் அசைந்து கொண்டே இருக்கக் கூடிய தன்மையுடையவை; மாறிக் கொண்டே இருக்ககூடிய தன்மையுடையவை.

அதே போல மனமும் அசைந்து கொண்டு மாறிக் கொண்டுதான் இருக்கும். அதிக வேகமாக அசைந்து கொண்டு இருக்கின்ற பொருளோடு மனதை வைக்கின்ற வரைக்கும் மனம் அந்த அளவுக்கு ஆடிக்கொண்டு அசைந்து கொண்டு தான் இருக்கும்.

இந்த உடலில் உயிர் இருக்கின்ற வரையில் இந்த உடலைப் பாதுகாக்க, வாழ்க்கையை நடத்திட, அசையும் பொருட்களோடு தொடர்பு கொள்வது அவசியம் தான்.

ஆனால் அதே நேரத்தில் எப்பொழுதும் அசைந்து கொண்டே ஆடிக்கொண்டே இருக்கின்ற நிலையில் இருக்கின்றதைவிட நிலைத்து இருப்பதும் அவசியம் தான்.

ஆகவேதான் மனிதனுக்கு நிலைத்த பொருளாகிய கடவுளை, தெய்வத்தை, வழிபடுவது, வணங்குவது, அதை உணர்ந்து கொள்வது, அதோடு லயித்து இருப்பது என்பது அவசியமாயிற்று.

மனிதனின் அறிவு எட்டிய நிலையில் அந்த பூரணத்துவம் வந்துவிட்டதானால், அப்பொழுதுதான் அடிக்கடி உணர்ச்சிவயப்படக் கூடிய தன்மையும், பேராசை, சினம், கடும்பற்று, இன்னும் முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வு-தாழ்வு மனப்பான்மை, வஞ்சம்

என்று ஆறு குணங்களாக தான் மாறாதிருக்கக்கூடிய ஒரு நிலைத்த பேறு உண்டாகும்." (தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி.)

"மனதை அடக்க நினைத்தால் அலையும்,
மனதை அறிய நினைத்தால் அடங்கும்".

"அவனில் அணு, அணுவில் அவன்
உன்னில் எல்லாம் உன்னை நீ அறி".

மனதின் அடித்தளம் இறை நிலை:
"அலை அலையாய் இயங்கும் மனத்தடித்தளமே நிலை பொருள்
அது தெய்வம் கடல் போன்று, அலை போன்றதே மனம்;
நிலை பொருளாம் இருப்பு சிவம் நித்தியம் என்றோதிடும்
நெடுவெளி உன் அறிவாகும் உனது அலையே மனம்;
கலையுணர்வால் மெய்ப் பொருளாம் கண்காணா ஒன்றினைக்
கண் காது மூக்கு முகம் குணம் உருவம் புகுத்தியே
சிலையுருவில் காட்டி சொன்ன கதைகளில் மயங்கி நாம்
சிக்கியுள்ளவரை உண்மை நிலை விளங்காதுணருவோம்".

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம் ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 6. மனித சரித்திரம்

மனிதனின் சிறப்பு என்ன?

உலகிலுள்ள எல்லாத் தோற்றங்களிலும் எல்லா உயிர்களிலும் சிறந்த மேலான ஒரு இயக்கநிலை மனித உருவம். எல்லாம் வல்ல இறைநிலையை முழுமையாக எடுத்துக்காட்டும், பிரதிபலிக்கும் கண்ணாடி மனிதனே.

உடலுக்குள் உயிர், உயிருக்குள் அறிவு, அறிவுக்குள் அருட்பேராற்றலின் இயற்கை [மெய்ப்பொருள்]. இவ்வாறு ஒன்றில் ஒன்றாக நிலைகொண்டு மனித உரு சிறப்பாக, வியத்தகு முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

உடல் குறிப்பிட்ட அளவு பருமனால் எல்லை உடையது. உயிரானது நுண்ணியக்க மூலக்கூறான விண் எனும் நுண்துகள்கள் கோடிக்கணக்கில் ஒன்றிணைந்து ஒரு தொகுப்பாக இயங்கும் ஆற்றல்.

இந்த உயிரானது உடலுக்குள் சுருங்கவும், உடலுக்குப் புறத்தே தக்க அளவு விரியவும் கூடியது.

அறிவு என்பது உயிரை மையமாகக் கொண்ட மெய்ப்பொருள். உடல் மூலம் ஆற்றிய வினைகளினால் பெற்ற அனுபவம், சிந்தனை, கற்பனை இவற்றிற்கேற்ப விரிந்தும், சுருங்கியும் செயல்புரியும் ஆற்றலுடையது.

அறிவில் அடங்கியுள்ள இரகசியங்கள் எண்ணி அறிய முடியாதவை. எல்லாம் வல்ல முழுமுதற் பொருளான மெய்ப்பொருள் உயிராற்றலை மையமாகக் கொண்டு தனது அசைவினாலும், உணர்வாலும் ஆற்றிய வினைப்பதிவுகள் அனைத்தும் அடக்கம் பெற்ற கருவூலம் அறிவு ஆகும்.

இது உயிர்த்துகளின் மையத்தில் தொடங்கி உயிர்த்துகள் தற்சுழற்சியால் விளையும் ஜீவகாந்த சக்தி மூலம் உடல் வரையிலும் மேலும் உடலுக்கு வெளியே புலன்கள் மூலம் உணரும் பொருட்கள் வரையிலும் யூகத்தால் பேரியக்க மண்டலம், அதற்கப்பால் நிலைத்த சுத்தவெளி எனக் கருதப்படும் மெய்ப்பொருள் வரையிலும் விரிந்து சுருங்கும் இயல்புடையது.

- எல்லாம் வல்ல மெய்ப்பொருளே சுத்தவெளியாகவும், மெய்ப்பொருளாகவும்

- விண் முதல் மண் வரையிலான பஞ்ச பூதங்களின் இணைப்பால் ஆகிய பேரியக்க மண்டலத் தோற்றங்கள் அனைத்திலும் இயக்க ஒழுங்காகவும்,
- உயிர்களிடத்தில் புலனுணர்வாகவும்,
- மனிதனிடத்தில் எல்லாமாக இருக்கும்,
- தன் முழுமையை உணரும் பேரறிவாகவும் இருக்கிறது.
- இந்த நான்கு தத்துவங்களும் ஒன்றிணைந்த மாபெரும் வல்லமையுடைய அறிவிலும், செயலிலும் சிறந்ததோர் உருவம் மனிதன். (தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி).

இறைசரித்திரத்தில் கடைசியாகப் பூத்த மலர்தான் மனிதன். எனவே மனிதன் மனதில் இறைவன் இருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லையே?

"உன்னற்கு அரியசீர் உத்தர மங்கையர்
மன்னுவது என்நெஞ்சில் அன்னே என்னும்
மன்னுவது என்நெஞ்சில் மால் அயன் காண்கிலார்
என்ன அதிசியம் அன்னே என்னும்." (திருவா.பா.343)

- தோழி! நினைப்பவர்க்கு அருமை உடையவர்.
- உத்தரகோச மங்கையில் இருப்பவர்.
- அவர் நிலைத்து நிற்பது என் நெஞ்சில் என்றும்.
- தோழி! நிலைத்து நிற்பது என் நெஞ்சில் என்பதை, திருமாலும் பிரம்மனும் அறியார்,
- இது என்ன விந்தை! என்றும். தலைவி கூறுகிறாள்.

## நான் நீ – வேதாத்திரியம்

இறைவனின் இன்னொரு பக்கம்தான் மனிதன் அல்லது மனிதனின் ம ரு பக்கமாக இருக்கும் இறைவனை தெளிவு படுத்துவதுதான் 'வேதாத்திரியம்'

தவம் செய்வதற்கு பிரம்மச்சரியம் அவசியம் என்பதை மாற்றி

ஒருவனுக்கு உடலும் உயிரும் இருந்தால் மட்டும் போதும் என்பதை போதிப்பது வேதாத்திரியம்

பக்தி எதையும் எடைபோடாது ஆனால் ஞானம் எதையும் எடைபோடாமல் விடாது

எந்த ஒன்று எல்லாவற்றிலுமே இருக்கிறதோ அந்த ஒன்றில் எல்லாமே உள்ளது. அதுதான் இறைநிலை (இறைவன்) என்ற தெளிவு

எளிய முறை தியானம் என்பது தனக்குள்ளேயே தான் இறங்குவது. தவம் எனபது தன்னை தனக்கு அறிமுகப்படுத்துவது. புறத்தே அலையும் மனத்தை அகத்தே உள்ள காந்த அலைமீது குவித்து நிறுத்தி நிலைபெறச் செய்வது. இதுவே எளிய முறை குண்டலினியோகம்.

அறிவின் மூலத்தோடு இணைவது தவம். அறிவின் வழிநடந்து கொள்வது அறம். இறை உணர்வும் அறநெறியுமே மனிதனை மேம்படுத்தும்.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம் ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 7. அவனில் தான் நீ உன்னில் அவன்

மனிதனால் செய்ய முடியாததையெல்லாம் செய்யக்கூடிய மாபெரும் ஆற்றல் மனிதனிலிருந்து இயங்குகிறது. பிரபஞ்சத்தையே இயக்குகிறது.

அவ்வாற்றலை சிந்தனைவாதிகள் இயற்கை என்கிறார்கள்.

விஞ்ஞானிகள் பிரபஞ்ச ஒருங்கிணைப்பு ஆற்றல் என்கிறார்கள்.

மெய்ஞானிகளாகிய தத்துவவாதிகள் தெய்வம் என்கிறார்கள்.

அது அங்கு, இங்கு என்று இல்லாமல் எல்லா இடங்களிலும், எல்லாப் பொருட்களிலும், எல்லா இயக்கங்களிலும் எல்லா விளைவுகளிலும் குறைவில்லாமல் நீக்கமற நிறைந்துள்ளது என்று முன்னோர்கள் கூறியுள்ளதைக் கேட்டு, அதையே மற்றவர்களுக்கும், பிற்காலத்தவர்களுக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

அவ்வாறு கூறுவதற்குக் காரணமாயிருக்கும் அறிவை சிந்தனை மூலமாக உணர்ந்து தெளிவடைய வேண்டும்.

சிந்தனையானது மன அமைதியிலும், ஓர்மையிலும்தான் வரும். வலிமையான உடலை இயக்குவதும், உயிராக இயங்குவதும், அறிவாக உணர்வதும் அதே தெய்வம்தான் என்பதை உணரலாம்.

இயக்குவது அறிவு. இயங்குவது உயிர். உணர்வது மனம். இவையெல்லாம் எல்லைகட்டிய உடலுக்குள் இருப்பவை.

இவற்றைப் பற்றியெல்லாம் கற்றவர்களாயிருந்தாலும், கற்காதவர்களாக இருந்தாலும், அவர்களின் செயல்பாடுகளில் மலரும் விளைவு இன்பம் அல்லது துன்பம் என்பது தெய்வ நியதியாகும்.

பிரபஞ்சம் முழுவதும் இருப்பாக உள்ள தெய்வம், தன் ஆற்றலால் இப்படித்தான் இயங்க வேண்டும் என்ற இயல்பூக்கமாகிய அறிவால் அணுக்களாகி அவைகள் கூடிய கொத்தியக்கம்தான் சடப் பொருட்களாகவும், ஜீவன்களுமாகத் தன்நிலையில் மாற்றம் பெற்றுள்ளது.

ஆகவே உனக்குள்ளாக தெய்வமும், தெய்வத்திற்குள்ளாக நீயும் இருப்பதை உணரும்போது, தெய்வமும் நீயும் பிரிவற்ற நிலையில் ஒன்றாகிவிட முடியும். தெய்வநிலையை நீ மறந்தபோது, மனிதன் என்ற சிறிய நிலையை அடைகிறாய்.

தெய்வத்தோடு இணைந்திருக்கும்போது நீயும் அதே நிலையையடைவதால் பெரியோன் ஆகிறாய்.

சிற்றறிவைப் பேரறிவோடு இணைக்கும்போது எல்லாப் பொருட்களிலும் தன்னையும் தன்னில் எல்லாப் பொருட்களையும் உணரலாம்,

அந்நிலை கைவரப் பெற்றால், அதுவே முக்தி, மோட்சம், முழுமைப்பேறு ஆகும். இதுவே மனிதப் பிறவியின் நோக்கமும் உரிமையும் ஆகும்.

“வெள்ளைக் கலிங்கத்தர் வெண்திரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேற்கொண்டான்
உள்ளங் கவர்வரால் அன்னே என்னும்.” (திருவா.பா.344)

- தோழி!
- வெண்பட்டு உடுத்தி இருப்பவர்.
- திருநீறு விளங்கும் நெற்றியை உடையவர்.
- மேல் அதிகாரிகள் அணியும் சட்டை அணிந்திருப்பவர் என்றும்.
- தோழி! மேல் அதிகாரிகள் அணிந்திருக்கும் சட்டை அணிந்திருப்பவர் என்றாலும்,
- தாவிச் செல்லும் குதிரையை நடத்திக் காட்டும் குதிரைக்காரனாக வந்து
- என் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டவன் என்றும். தலைவி கூறுகிறாள்

## அவனில் தான் நீ உன்னில் அவன் – வேதாத்திரியம்

“எல்லாம் வல்ல தெய்வமது
எங்கும் உள்ளது நீக்கமற
சொல்லால் மட்டும் நம்பாதே
சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்

வல்லாய் உடலில் இயக்கமவன்
வாழ்வில் உயிரில் அறிவுமவன்.
கல்லார் கற்றார் செயல் விளைவாய்க்
காணும் இன்ப துன்பமவன்.

அவனின் இயக்கம் அணுவாற்றல்
அணுவின் கூட்டுப் பக்குவம் நீ
அவனில் தான் நீ உன்னில் அவன்
அவன் யார்? நீயார்? பிரிவேது?
அவனை மறந்தால் நீ சிறியோன்
அவனை அறிந்தால் நீ பெரியோன்
அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம்
அறிவு முழுமை அது முக்தி."

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 8. இறை உறவா?

அடியவர்க்கும் ஆண்டவனுக்கும் என்றென்றும் ஆறாத உறவு இருந்து வருகிறது.

பாரில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம் என்று வீறுகொண்டு முழங்குவோரும் பரிபூரணனுக்கு அடிமை செய்ய முந்துகின்றனர்.

நாமார்க்கும் குடியல்லோம் என்று இறுமாந்து பேசும் நாவரசர் பெருமானும் இறைவன் முன் மீளா ஆளாகி அடிமைப்பட்டு நிற்கிறார்.

இவ்வாறு அனைத்துயிர்களையும் பிணிக்கும் பேராற்றல் ஒன்று நின்று நிலவி நம்மை உய்யக் கொள்ளுகிறது.

அத்தகைய பேராற்றலுக்கும் நமக்கும் உள்ள உறவே இனிய உறவாக, மெய்யான உறவாக அமைகிறது. பிற உறவனைத்தும் கண்மயக்காய் ஒழியும் பொய்த்தன்மையவே.

எத்தாயர் எந்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்து உதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர் – எனவும்

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார்
தாந்தாம் யாரே வந்தவாறேதோ
போமாறேதோ
மாயமாம் இதற்கேதும்
மகிழ வேண்டாம் – எனவும்

எனவரும் அடிகளில் அப்பர் சுவாமிகள் உலக வாழ்வின் பொய்த் தன்மையைப் புலப்படுத்தக் காண்கிறோம்.

இந்த உண்மையை உள்ளவாறு தெளியுமிடத்து, நமக்கும் இறைவனுக்கும் உள்ளதாகின்ற உறவு வலுப்பெறும்.நம் வாழ்வு சிறக்கும்.

ஆண்டவனோடு கொள்ளுகின்ற உறவில் உரிமை சிறக்கின்றது ; அடிமை உணர்வு அகல்கின்றது; இன்பப் பேறு வாய்க்கின்றது.

அன்னையும் அத்தனையும் அன்றே நீத்தாள்; தன்னை மறந்தாள்; தன் நாமம் கெட்டாள்: தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே என்ற அடிகளில் அப்பர் சுவாமிகளும்,

தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னை சங்கரா! யார் கொலோ சதுரர்? அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்.

உன்னைக் கண்ணுறக் கண்டுகொண்டு களித்தனன்! உன்னைக் குறுகினேற்கு என்ன குறையே என்ற அடிகளில்

மாணிக்கவாசகரும் இறைவனோடு இயைந்த இன்ப உறவின் இயல்பை வியந்து பேசுகின்றனர்.

இம்மேலான உறவு எத்தகைய வலிமையுடையது என்பதை வேறு இடங்களிலும் காண்கிறோம்.

மாணிக்கவாசகர் ஆண்டவன் தம்மை எவ்வாற்றானும் கைவிடல் ஆகாது என்பதை அவர்க்கு உரிமையால் உணர்த்துவார் போன்று என்னைக் கைவிட்டு விடாதே! அப்படிக் கைவிட்டு விட்டால் நின்னால் கைவிடப்பட்டவன் நின் அடியார்க்கு அடியவன் என்று பலரிடத்தும் சொல்லி நின்னைப் பழிக்கு உரியவனாக்குவேன்; நின்னைப் பித்தன் என்று இகழ்வேன் என்று மருட்டுகின்றார்.

சுந்தரரோ தம் கண் இழந்து வருந்துகின்ற நிலையில் – என் கண்ணைக் கெடுத்துவிட்டு நீ மட்டும் மூன்று கண்களை வைத்துக்கொண்டு வாழ்ந்து போவாயோ! என்று உரிமைக் கூச்சலிடுகின்றார்.

இத்தனை உரிமைக்கும் இடம் தந்து நிற்கும் ஓத உலவா ஒரு தோழனின் பெருமையை என்னென்று பேசுவது!

சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான் பவன் எனும் நாமம் பிடித்துத் திரிந்து பண்ணால் அழைத்தால் இவன் என்னை அழைப்பொழியான் என்று எதிர்ப்படுமே என்ற அடிகளில் நாவரசர் இறைவனின் எளிவந்த தன்மையைச் சிறப்பித்து முயன்றால் அவனது உறவு நமக்கு எப்படியும் கிட்டும் என்ற பேருண்மையை வலியுறுத்துகின்றார்.

புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்
பிழைத்தால் பொறுக்க வேண்டாவோ! (லாததோ!
திகைத்தால் தேற்ற வேண்டாவோ! –

குன்றேயனைய குற்றங்கள் செய்தாலும் குணமாம் என்றே நீ கொண்டால் என் தான் கெட்டது? இரங்கிடாய்! என்று மணிவாசகர் ஊடி உறவாடும் உயர்நிலை அடியவர்க்கே உரிய தனிச்சிறப்பு அன்றோ!

ஆவித்துணையே அருமருந்தே என்றனைநீ கூவி
அழைத்து இன்பம் கொடுத்தாற் குறைவாமோ!

என்பது தாயுமானார் தம் உரிமைப் பிணக்கு, இறை உறவின் இனிமை இங்கன்றோ புலப்படுகின்றது!

குறைவொன்றுமில்லாத கோவிந்தா! உன் தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது, எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமேயாவோம்; உனக்கே ஆட்செய்வோம் என்ற அடிகளில் கண்ணனிடத்துத் தன்னையே இழந்து நிற்கும் கோதையைக் காண்கிறோம்.

“உறவு மற்றொருவரில்லை காரொளி வண்ணனே! கதறுகின்றேன். யாருளர் களைகண்!” என்பது ஆழ்வார் தம் அருட் புலம்பல்.

இவ்வாறு அடியவர் பலரும் ஆண்டவன்பால் தாம் உரிமை கொண்டாடி இன்பப்பேறு எய்துவதோடு அமையாது யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பாங்கில் பற்றும் பற்றாங்கு அதுபற்றி நற்றாமம் கதி அடைவோம் என்னில் ஓடி வம்மின் என்று நம்மையும் அழைக்கின்றனர்.

இறைவனோடு கொள்ளும் இனிய உறவில்தான் அழுக்காறு, அவா அற்ற அன்பு மனம் மலர்கின்றது. அருள் நெறி ஓங்குகின்றது.

“சேரவாரும் செகத்தீரே! மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே” என்ற அன்பு அழைப்பு அனைவருக்கும் கிட்டுகின்றது.

உலகியல் வழக்கில் தாயன்பு தலையாயதாகப் போற்றப்படுவது.

ஈன்றாளோடு எண்ணக் கடவுளுமில்லை
தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என வரும் மொழிகள் தாயன்பின் தனித்தன்மை

உணர்த்துவன.ஆனால் இறையன்போ தாயன்பினை ஒத்தது என்றும், தாயன்பின் மிக்கது என்றும் இருபடித்தானம் போற்றப் பெறுவது. தாயன்பு தலையாயது எனினும் திரிதற்பாலது என்பதனை வலியுறுத்த, பிறப்போரன்ன உடன் வயிற்றுள்ளும் சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும் எனவரும் புற நானூற்றுத் தொடரும்.

அறன் சாரா நல்குரவு ஈன்ற தாயானும், பிறன்போல நோக்கப்படும் என்ற குறட்பாவும் இல்லானை இல்லாளும் வேண்டாள்; மற்று ஈன்றெடுத்த தாய்வேண்டாள்; செல்லாது அவன்வாயிற் சொல் எனவரும் நல்வழித் தொடரும் போதிய சான்றுகளாம்.

இறையன்பு தாயன்பினை ஒத்ததும், மிக்கதும், ஆகும் என்ற உண்மையை,

தாயேயாகி வளர்த்தனை போற்றி
தாயாய் முலையைத் தருவானே
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
தாயினும் சாலப்பரிந்து
அன்னையினும் பெரிதினிய கருணையினால்
தாயினும் நல்லன் தாழ்சடையோனே

என்ற அடிகளால் தெளியலாம்.

எனவே தாயன்பினும் சாலச்சிறந்தது இறையன்பு என்பதும் அம்மையப்பனாக நின்று அனைத்துயிர்க்கும் அருள் சுரப்பவன் இறைவனே என்பதும் வெளிப்படை.

தலைவ! நினைப்பிரியாத நிலைமையும் வேண்டுவனே! என்று முறையிட்டு இறைவனோடு இயைந்த கேண்மையில் நாளும் திளைத்து நலம் பெறுவோமா!

இறை உறவாகிய இன்ப உறவு வாய்க்கத் துணை நிற்பவனே ஞான குரு, அருட் குரவன் என்று போற்றத்தக்கவன். அத்தனை சிறப்புமிக்க குருவருளைப் பெறுவோமாக!

"தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆள் எம்மை ஆள்வரால் அன்னே என்னும்
ஆள் எம்மை ஆளும் அடிகளார் தம்கையில்
தாளம் இருந்தவாறுன்னே என்னும்." (திருவா.பா.345)

- தோழி!
- தாளியும் அறுகும் கொண்டு கட்டப்பட்ட மாலையை அணிந்திருப்பவர்.
- சந்தனக் கலவை பூசி இருப்பவர்,
- நம்மை அடிமையாகக் கொண்டு ஆளுபவர் என்றும்.
- தோழி! நம்மை அடிமையாகக் கொண்டு ஆளுபவர் கையில் தாளம் இருந்தது ஏன்? என்றும். தலைவி கேட்கிறாள்.

## *இறை உறவு* - வேதாத்திரியம்

.

இறைவனை நோக்கித் தியானம் செய்தால், வேண்டினால், அவர் நமக்கு இன்னது இன்னது வேண்டும் என்று கேட்பதைக் கொடுப்பார் என்பதாக நாமே படித்தோ அல்லது பெரியவர்கள் சொல் மூலமாகக் கேட்டோ இறைவனை வழிபடுகிறோம்.

அங்கே உணர்வு தான்; மதிப்பு இல்லை என்று சொல்லவில்லை; அந்த மதிப்பு மாத்திரம் இருக்கிறது. ஏதோ கிடைக்க வேண்டும் என்ற ஆசை மிகுந்திருக்கிறது.

உறவிலே அப்படி அல்ல; அங்கு முழுவதுமாகக் கலந்து நிற்கிறோம்.

எனக்கு அங்கே ஒன்று கிடைக்கும், இல்லை நான் இங்கிருந்து ஒன்று கொடுப்பேன் என்பதை எல்லாம் மறந்து, இரண்டும் ஒன்று கலந்த இடத்திலே ஏற்படுவது தான் உறவு.

அந்த உறவை, அதாவது, இறை-உறவை ஏற்படுத்திக் கொள்வது தான் ஜீவன் உய்வதற்கான வழி.

அடுத்து, இறை-உறவை "ஏற்படுத்திக்" கொள்ள வேண்டுமா என ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கும் பொழுது என்ன தெரிய வருகிறது?

அந்த உறவு தான் ஏற்கனவே இருக்கிறதே, ஏற்படுத்த வேண்டும் என்பதில்லையே!

அதை அறிந்து, உணர்ந்து கொள்ளும் போது எப்படி நாம் அவனை நினைக்காமல் இருந்தாலும் கூட எனக்குள்ளாகவே அறிவாக, உயிராக, இல்லமாக, உள்ளமாக (இல்லம் என்றால் உடல்; உள்ளம் என்றால் உயிர்) இருக்கக் கூடியவன் அவனேதான் என்ற ஒரு தெளிவு ஏற்பட்ட பிறகு அவன் வேறு, இவன் வேறு என்று நினைப்பதற்கில்லை

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 9. உண்மையான இறை பக்தி

சிவனும், பார்வதியும் வான் வழியாக பூலோகத்தை கவனித்தபடி வலம் வந்து கொண்டிருந்தனர்.

அப்போது ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்த நபர், தன்னுடைய வேட்டியில் இருந்த கிழிசலை தைத்துக் கொண்டிருந்தார்.

அவர் ஒரு சிவபக்தர். தன் பணிகளை செய்தபடி இறை சிந்தனையை தவறாது கடைப்பிடித்து வருபவர்.

அந்த நபரைக் கண்டதும், பார்வதியின் உள்ளம் பாசம் கொண்டது. சிவனைப் பார்த்து, ‘மரத்தடியில் வீற்றிருக்கும் உங்கள் பக்தனைப் பார்த்தீர்களா?’ என்றார்.

‘பார்த்தேன்’ என்றார் ஈசன்.



அன்னையோ, ‘பார்த்த பிறகு, கண்டும் காணாமல் போவது எப்படி? வாருங்கள். அவருக்கு ஏதேனும் வரம் கொடுத்து வளமை படுத்தி விட்டுப் போகலாம்’ என்று அழைத்தார்.

ஈசனுக்கு தன்னுடைய பக்தனைப் பற்றி நன்றாக தெரிந்திருந்தது. அவர் பார்வதியிடம், ‘தேவி! அவன் அந்த நிலையை எல்லாம் கடந்தவன். இப்போது அவனிடம் செல்வது வீண் வேலை. வேண்டாம் வா!. நாம் நம் வழியே செல்லலாம்’ என்றார்.

ஆனால் பார்வதி தேவி விடுவதாக இல்லை. சிவபெருமானை வற்புறுத்தி மரத்தடிக்கு அழைத்துச் சென்றார்.

பின்னர் இருவரும் மரத்தடியில் அமர்ந்திருந்த நபரைப் பார்த்து, ‘வணக்கம்’ என்று கூறினர்.

தனக்கு வணக்கம் வைப்பது யார்? என்று தலை நிமிர்ந்து பார்த்த அந்த நபர், எதிரில் நின்ற சிவபெருமானையும், பார்வதியையும் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார்.

‘அடடே.. எம்பெருமானும், பெருமாட்டியும்.. வாருங்கள்! வாருங்கள்!’ என்று வரவேற்று அவர்களுக்கு தாகம் தீர்க்க மோர் கொடுத்து உபசரித்தார்.

பின்னர் தன்னுடைய வேட்டியில் இருந்த கிழிசலை தைக்கும் பணியில் மும்முரமாகி விட்டார்.

சற்று நேரம் பொறுமையாக காத்திருந்த சிவபெருமானும், பார்வதியும்.. ‘சரி.. நாங்கள் புறப்படுகிறோம்’ என்று கூறினர்.




அந்த நபரும், ‘போய் வாருங்கள்’ என்று வணக்கம் செலுத்தி விட்டு, மீண்டும் வேட்டியின் கிழிசலைத் தைக்கத் தொடங்கிவிட்டார்.

பார்வதிதேவி சிவபெருமானை தூண்ட, ஈசன் ‘பக்தனே! நாங்கள் ஒருவருக்கு காட்சி கொடுத்து விட்டால், அவருக்கு வரம் கொடுக்காமல் போவதில்லை. எனவே நீ ஏதாவது கேள்.. தருகிறோம்’ என்றார்.

அந்த நபர் சிரித்தார். ‘வரமா...! உங்கள் தரிசனமே எனக்கு போதுமானது இறைவா! வரம் எதுவும் வேண்டாம். உங்கள் வழியைத் தொடருங்கள்’ என்று சொல்லிவிட்டு மீண்டும் பணியில் ஆழ்ந்தார்.

ஈசனுக்கு இது வீண் வேலை என்று தெரிந்தாலும், அம்பாள் விடுவதாக இல்லையே.. ஏதாவது வரம் கொடுக்காமல் செல்ல மாட்டோம் என்று இருவரும் பிடிவாதமாய் நிற்க.. இறுதியில் அந்த நபர் ஒரு வரம் கேட்டார்.

‘நான் தைக்கும் இந்த ஊசிக்கு பின்னாலேயே நூல் போக வேண்டும். அது போதும்’ என்றார்.

அனைத்தும் அறிந்த சிவன் புன்னகைத்தார். பார்வதி திகைத்தார். ‘அதுதான் ஏற்கனவே ஊசிக்குப் பின்னால் நூல் போகிறதே... இதற்கு நாங்கள் ஏன் வரம் தர வேண்டும்?’ என்றார் பார்வதி.

‘அதைத்தான் நானும் கேட்கிறேன். நான் ஒழுங்கு தவறாமல்

வாழ்க்கை நடத்தி வருகிறேன். இறைவனையும் தவறாது தொழுது வருகிறேன். ஆகையால் எனக்கு வரவேண்டிய பலன் நியதிப்படி தானாக எனக்கு பின்னால் வருமே. இடையில் நீங்கள் எதற்கு எனக்கு வரம் தர வேண்டும்? என்றார் அந்த நபர். (இதைத்தான் செயல் விளைவுத் தத்துவம் என்கிறது வேதாத்திரியம்)

பார்வதிக்கு உண்மை விளங்கி விட்டது. ஈசனும் பார்வதியின் முகம் தெளிந்ததைக் கண்டு அதைப் புரிந்து கொண்டார்.

ஆம்! தூய்மையான இறை நம்பிக்கை கொண்டவர்கள், ‘நாம் சரியாக நடந்து கொண்டால், நமக்குரிய விளைவும் சரியானதாகவே இருக்கும் என்ற மனத்தெளிவு பெற்றவர்களாக இருப்பர். அவர்களுக்கு அதை மீறிய எந்த சலுகையும் தேவையற்றது.

“தையல் ஓர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்தவர் போதலும் என்னுள்ளம்
நையும்இது என்னே அன்னே என்னும்.” (திருவா.பா.346)

- தோழி!
- மாது ஒரு பாகத்தர்,
- தவ வேடம் உடையவர்.
- பிச்சை ஏற்கச் செல்வர் என்றும்.
- தோழி! பிச்சை ஏற்கச் செல்பவராய் இருந்தும், அவருக்காக என் உள்ளம் ஏங்குவது ஏன்? என்றும். தலைவி கேட்கிறாள்.

## இறையுணர்வு – வேதாத்திரியம்

“எந்தஒரு அறிவதனைப் பெற்றுக் கொண்டால்
    இப்பெரிய பேரண்ட நிகழ்ச்சிக் கெல்லாம்
முந்தி.நடு, முடிவு என்ற முழுவிளக்கம்
    முற்றறிவின் கருணையினால் கிட்டுமோ, நான்
அந்தஒரு பேரறிவை அடைந்து விட்டேன்.
    அழுத்தமெனும் ஆற்றலதே பேரா தாரம்.

சிந்திக்கச் சிந்திக்கச் சிவம், பேரண்டம்,
சீவன்இவை வெளி விண்ணில் அடங்கக் காண்போம்."
(ஞாக.பா.1222)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 10. இறை பித்தா? இறைக் காதலா?

உலக வரலாற்றில் ஆண்டாளுக்கு இணையான இறைப் பித்து கொண்ட காதல் கவிகள் வேறு யாரும் கிடையாது. இன்று வரைக்கும் இல்லை எனலாம்.

ஆண்டாள்தான் காதலை கனிந்து உள்ளுருகி பாடிய பெண்கவிஞர்.தன் காதலை இனிய தமிழில் சொல்லோவியமாக, என்றும் வாடாத பாமாலையாக பாடி,சூடி மகிழ்ந்தாள்.

இறைப் பித்தால், காதல் வெள்ளம் சுழித்து கரைபுரண்டு ஓடியது. அந்த வெள்ளத்தில் சிக்கிக் கொண்டவளுக்கு, என்ன செய்வது என்று தெரியாது நோன்பு நோற்ற கோதை பரமனை சேர்ந்தாள்.

பரந்தாமன் புருஷோத்தமனைக் காதலித்த தனிப் பெருங் காவியம் தான் ஆண்டாளின் வாழ்க்கை.

அந்தக் காலத்தில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் விஷ்ணு சித்தர் என் கி  றர் வசித்து வந்தார். அருமையான புலவர். இந்த விஷ்ணு சித்தர்தான் பின்னாளில் பெரியாழ்வர் என்று அழைக்கப்பட்டவர்.

ஒருநாள் நந்தவன பெருமாளுக்கு மாலை தெடுக்க மலர்களை கொய்து கொண்டிருந்தபோது துளசிச் செடிகளின் ஊடே இயற்கை அழகின் வடிவாக கிடந்த பெண் குழந்தையாக, தங்கக் கனியாக ஆண்டாள் கிடைக்கப் பெற்றார்.

விஷ்ணுசித்தருக்குக் குழந்தை இல்லை.
ஆண்டாளுக்கும் பொறுப்பாளர் இல்லை.
ஆக இது பொருத்தமான அமைப்பாக அமைந்திடவே அவர் குழந்தையை எடுத்து வளர்க்க ஆரம்பித்தார்.

குழந்தைகளுக்கு பயம் காட்ட சில சமயங்களில் நமது பெரிசுகள் பூச்சாண்டியிடம் பிடித்து கொடுத்து விடுவேன், அடம் பிடிக்காமல் இரு என்று கூறுவதுண்டு.

விஷ்ணு சித்தருக்கு பூச்சாண்டி தெரியாத காரணத்தால் ஒரு சமயம் வேடிக்கையாக அரங்கனுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுக்கப் போகிறேன் என்று ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சொல்லவே சிறுமியான ஆண்டாளுக்கு மனதில் பதிந்து விட்டது.

சிறுமியான ஆண்டாள் அதையே உண்மை என்று நினைந்து விட்டாள்.

அன்று தெடங்கி திருவரங்கத்தில் இருக்கிற அரங்கன்தான் தன் புருஷன் என்று உளமாற நம்ப ஆரம்பித்து விட்டாள்.

கோதைக்கு இயல்பிலேயே அரங்கன் மீது மாளாக் காதல் மலர்ந்திட, அவள் அரங்கனை அடையவே பிறவி எடுத்தவள் என்று திடமாக நம்பினாள்.

நாளுக்கு நாள் கண்ணன்மீது ஆண்டாளுக்கு காதலும் வளர்ந்தது.
பாவை நோன்பு நோற்றாள்

அவ்வகையில் திருப்பாவை நாச்சியார் திருமொழி என்று இரு பிரபந்தங்களை அருளினாள்.

மகளுக்கு திருமண வயது வந்துவிட்டதே! அவள் விருப்பத்தை அறிய கேட்டபோது, அவளிடமிருந்து...,

மானிடவர் கென்று பேச்சுப்படில்
வாழகில் லேன் கண்டாய் மன்மதனே!

என்று பாட்டாய் பதிலாக வந்தது.

இறுதியாக, ஏழு கமலப் பூவழகுகளை யுடைய திருவரங்கத் தம்மானையே மணப்பேன் என்றாள்.

விஷ்ணு சித்தர் தினம் கோவிலுக்கு போவார். தன் கையால் தெ டுத் த மாலைகளை வடபத்ரசாயிக்கு அணிவித்து அழகு பார்ப்பார். பாசுரங்கள் பாடுவார். இறை ஊழியம் செய்து விட்டு வீடு திரும்புவார்.

அப்படி ஒரு நாள் இறைவனுக்குச் சூட மலர் மாலையை எடுத்த போது மாலையில் ஒரு பெண்ணின் தலை முடி இருப்பதைப் பார்த்து அதிர்ந்து போனார் விஷ்ணு சித்தர்.

இறைவனுக்குச் சூட்டவேண்டிய மாலையை எந்தப் பெண் தன்தலையில் சூடி அழகு பார்த்திருக்க முடியும்? ஆண்டாளா? சந்தேகமே இல்லை. ஆண்டாள்தான்.அவள் தான் அதைச் செய்திருப்பாள். அவளால் மட்டும் தான் அப்படிச் செய்திருக்கவும் முடியும்!

இதிலென்னப்பா தப்பு இருக்கு?
இறைவன் யார்?

நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறவர்தானே? நான் முதலில் சூடிப் பார்த்து விட்டு அவருக்குச் சூட்டினால் என்ன குடி முழுகிப் போய் விடும்? என்று கேட்டாள் ஆண்டாள்.

ஆடிப்போய்விட்டார் விஷ்ணு சித்தர்.
அவர் பெரிய ஆசாரசீலர்.
கோயில் காரியங்களெல்லாம் ஆசாரமாக,முறைப்படி நடக்கவேண்டும்.

அவருக்கு ஆனால் தன் மகளே இப்படி ஒரு அபசாரத்தைச் செய்திருக்கிறாள்! கடவுளே, இதற்கு என்ன தண்டனை காத்திருக்கிறதோ என்று பதைத்தது அவரது பக்தி மனம்.

அன்றைக்கு மட்டுமல்ல, பல நாட்களாவே ஆண்டாள் இறைவனுக்குக்காக தந்தை கட்டி வைக்கும் மாலைகளை முதலில் தான் சூடி ஒரு கிணற்றின் நீரில் அழகு பார்த்துவிட்டுதான் அதைக்கொண்டு போய் அப்பாவிடம் கொடுத்து வந்திருக்கிறாள்.

காதல் என்று வந்து விட்டால் கடவுளாவது, புனிதமாவது! காதல்தானே ஆகப்பெரிய புனிதம்!

பின்னால் இதுபற்றி விஷ்ணுசித்தர் அழுது அரற்றி இறைவனிடம் மன்னிப்புக் கேட்டபோது, பாமாலைப் பாடித் தரப் பிறந்தாள், பூமாலை சூடிக் கொடுக்கவும் பிறந்தாள் என்று கூறியது பெரியாழ்வருக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. அதன்படி பெருமாள் சொன்னபடி அவர் செய்து வந்தார்.

அன்று முதல்சூடிக் கொடுத்தவள் சூடிக் கொடுத்த சுடர்கொடி என்று எம்பிராணனையே ஆண்டு விட்டாள் என்பதால் ஆண்டாள் என்னும் பெயர் விளங்கிற்று.

கதைகள் எப்போதும் சுவார்சகரமானவைதான்.

ஆனால் ஆண்டாள் விஷயத்தில் கதையைவிட அவளது பாடல்கள் ரொம்ப சுவாரசியமானது, சுவையானது.

அவள்தான் தமிழை முதல் நவீன பெண் கவிஞர். அந்தக் காலத்துக்குச் சற்றும் ஒத்துவராத அதிநவீன சங்கதிகளை மட்டும்தான் அவள் தன் பாடல்களுக்குக் கருப்பொருளாகத் தேர்ந்தெடுத்திருக்கிறாள்.

ஒரு உதாரணம் சொன்னால் விளங்கும். ஆண்டாளுக்கு, அவளது காதலனான மகா விஷ்ணுவின் உதட்டில் முத்தமிடவேண்டும் என்று ஒரு ஆசை வந்துவிட்டது.

அதுவும் உதட்டில்.எப்படி முத்தமிட வேண்டும்? அவர்க்கும் ஒரு அனுபவம் வேண்டுமல்லவா? ஏற்கனவே மணந்த மகா லட்சுமியை கேட்கலாம். அது பிரச்சனையாகி விடும்.

வேறு யாரிடம் கேட்கலாம்? சட்டென்று அவளுக்கொரு யோசனை உண்டானது.

அட,என் காதலன் ஒரு சங்கு வைத்திருக்கிறானே!
அதை வைத்துதானே எப்போதும் வாயில் வைத்து ஊதுகிறான்!
அந்தச் சங்கிடம் கேட்டால் அவனது உதட்டின் சுவை
தெரிந்திருக்குமே!

இந்த யுக்தி உதயமானதுமே கவிதை பீறிட்டுக் கொண்டு புறப்பட்டு விடுகிறது.*

கற்பூரம் நாறுமே,
கமலப்பூ நாறுமோ,**
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ**
மருப்பொசித்த மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமே**
விருப்புற்று கேட்கின்றேன் சொல்லாழி வெண் சங்கே!

கற்பூரம் என்றால் மகா விஷ்ணுவுக்கு உகந்த பச்சை கற்பூரம்.
கமலப்பூ என்றால் கமலப்பூ தான்.

பவளச் செவ்வாய் தித்திப்பாக இருக்குமோ? என்று சங்கிடம் சந்தேகம் கேட்கிறாள்.

மாதவனின் வாய்ச்சுவைப் பற்றியும், வாசனை பற்றியும் ஆசை ஆசையாக கேட்கிறேன், சொல்லித் தெலையேன் வெண்சங்கே என்று சங்கிடம் கேட்கிறாள் ஆண்டாள்!

இதைவிட சுவையான ஒரு காதல் பாட்டை எந்தக் கவிஞர் தரமுடியும்?

ஆண்டாள் அதிகம் பாடவில்லை தான்.
மொத்தம் 143 பாடல்தான்.

ஆனால்,நாச்சியார் திருமொழி என்று வைவணவர்களின் நான்காவது வேதமான நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் அந்தப் பாசுரங்களுக்கு ஒரு நட்சத்திர அஸ்தஸ்து உண்டு.

எளிமையும் இனிமையுமான காதல்பாடல்தான் எல்லாமே.
பக்தியில் பல வகைகள் உண்டு. இறைவனை தாயாய், தந்தையாய், தோழனாய், தலைவனாய், தெண்டனாய் இன்னும் பலப்பல வடிவங்களில் கண்டு,பாடி பக்தி செய்தவர்கள் பலர் இருக்கிறார்கள்.

ஆனால் காதலனாக வரித்துக்கொண்டு கவிதை மழை பொழிந்தவள்.ஆண்டாள் தான்!

வடதேசத்துக்கு ஒரு மீரா என்றால் நம்மூருக்கு ஆண்டாள்! மார்கழி மாதமானால் அதிகாலை பொங்கலுடன் உள்ளே நுழையும் திருபாவைதான் ஆண்டாள்.

இறைவனை மணப்பதற்காகப் பாவை நோன்பிருந்து அதிகாலை வேளையில் தினசரி ஒன்றாக ஆண்டாள் பாடிய முப்பது பாடல்கள்.

என்ன இந்தப் பெண் இப்படி ஒரு அரங்கன் பித்து பிடித்து அலைகிறாளே என்று அவளது அப்பாவுக்கு ரொம்ப கஷ்டமாகப் போய்விட்டது.

வில்லிபுத்தூர் இறைவனான வட பத்ரசாயிடம் போய் கதறி கண்ணீர் மல்க தன் மகளுக்கொரு வழி காட்டும்படிவேண்டினார்.

அவரால் வேறென்ன செய்ய முடியும்.
இறைவன் உத்தரவுப்படியே விஷ்ணு தன்மகளை ஸ்ரீரங்கத்திற்கு அழைத்துப் போனார்.

இப்படி ஒரு நிகழ்வு இவ்வையகத்தில் நிகழுமா என்ற ஆச்சிரிய

ஆர்வத்துடன் ஊரேதிரண்டு ஊர்வலமாக கோதையின் பின்னால்சென்றது.

வல்லபதேவ பாண்டியனும் அந்தஊர்வலத்தில் முன் சென்றான்

இத்தகைய இறைப்பித்து கொண்டு மாணிக்கவாசகர் பாடிய பாடல்கள்தான் திருவாசகம்.

“கொன்றை மதியமும் கூவின மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம்உன் மத்தமே
இன்று எனக்கு ஆனவா றன்னே என்னும்” (திருவா.பா.347)

- தோழி!
- சடையில் கொன்றை மலர், பிறைச் சந்திரன், வில்வ இலை, ஊமத்தம்பூ முதலியவற்றைச் சூடி இருப்பவர் என்றும்.
- தோழி! அந்த ஊமத்தம்பூ இன்று எனக்கு, அவர் மீது பித்து உண்டாக்கியது என்றும். தலைவி கூறுகிறாள்.

## இறையுணர்வால் அறிவை அடைந்த முழுமைப் பேறு – வேதாத்திரியம்

“இறையுணர்வால் அறிவடைந்த முழுமுப் பேற்றால்
இயங்கும் பல்லுயிரிடத்தும் மலரும் நட்பை
மறையுணர்ந்தோர் அன்பு என்பர். மி ன த உள்ளம்
மாண்பு பெற்ற நிலை இதுவே அமைதி வித்து,” (மாக்கோலம் 133)

ஆண்டாளைப் போல் மாணிக்கவாசகரைப் போல் இறைஉறவு கொண்டு ஆனந்தமாக வாழ்வோமாக. வாழ்க வளமுடன்.

வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து

YOUTUBE LI NKS

1. நாத தத்துவம் https://youtu.be/LiqIe_-Ax74
2. கருணைக் கடலா இறைவன்? https://youtu.be/cVvkMAx1Dqc
3. இறைவன் மீது திருக்காதல்
4. என் உள்ளம் வாடும் அன்னே! https://youtu.be/maVp7QyunsI
5. மனதை அடக்கும் உபாயம் https://youtu.be/OMyc2hPIst8
6. மனித சரித்திரம் https://youtu.be/yUNavq7PPPg
7. அவனில் தான் நீ உன்னில் அவன் https://youtu.be/OoIv22pLClk
8. இறை உறவா? https://youtu.be/Sjm0_BLTR34
9. உண்மையான இறை பக்தி https://youtu.be/uhZ-Vb3o9Mk
10. இறை பித்தா? இறைக் காதலா? https://youtu.be/85hPQ8NyWLY

# துணைநின்ற நூல்கள்.


1. திருவாசகம், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
2. திருவாசகம், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
3. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
4. இணையதள தகவல்கள்.
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
6. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.
7. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை
8. ஆண்டாள் திருப்பாவை
9. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்
10. வள்ளலாரின் திருஅருட்பா.

# பானுகுமார் படைப்புலகம்

(145 புத்தகங்கள்)

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)

4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்

9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்சிதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே

## திருவாசகமும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.

9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2

3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

vethathiriam Banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 119 தலைப்புகளில் vethathiriam Banukumar vஎன்ற யூடியூப் சேனலில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்

32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்டோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5

67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔளயைார் சிந்தனைகள்

102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107. Retirement Speech
108. Audio speech part 1
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?